2002 மார்ச் 28] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (1-04-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

ஆ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

53. சென்னை-2, அண்ணா சாலை, ரஹேஜா டவரிலுள்ள சீரமைப்பு மேம்பாட்டு பன்னாட்டு வங்கியின் உத்தேச அலுவலக வளாகத்தில் (உலக வங்கி) உள் அலங்கார அமைப்புப் பணியை திருவாளர்கள் சி.பி. ரிச்சர்ட் எல்லிஸ் நிறுவனத்திற்கு செய்யப்பட்ட இந்த அறிவிக்கையுடன் இணைக்கப்பட்ட I மற்றும் II விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் சம்பந்தப்பட்ட மின் பொருட்கள் மற்றும் மின் இணைப்புப் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனைமீது 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின், 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவு மற்றும் 3-B பிரிவின்கீழ், வணிகர் ஒருவர் செலுத்தத்தக்க வரிக்கு விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 24-9-2001 ஆம் நாளிட்ட 81ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959). 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

54. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையின் பகுதி-C-யின் 45-வது இனத்தில் (1) துணை இனத்தில் குறிப்பிடப்பட்ட தேயிலையை குன்னூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ஏலம் விடும் மையங்களில் விற்பனை செய்யும்போது செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரை, வரி

[2002 மார்ச் 28

வீதத்தை எட்டு சதவீதத்திலிருந்து நான்கு சதவீதமாகக் குறைப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 31-12-2001 ஆம் நாளிட்ட 126 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

55. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு போதை மருந்து விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 26-12-2000 ஆம் நாளிட்ட 243ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1985 ஆம் ஆண்டு போதை மருந்து மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 61/1985) 78 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

56. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள்துறையின் 18-5-1999 ஆம் நாளிட்ட 678 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IX/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

57. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A-பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

58. 2000-20001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள் - காகித நிறுவனத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

59. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

60. 2000-2001 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை. (1948 ஆம் ஆண்டு மின்சாரச் (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75(1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)